☎ 04175 - 236654 / 235295

**SHANMUGA INDUSTRIES**
**ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)**

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

26.12.2021

## சண்முகா கல்லூரியில் ஆசிரியர் தினவிழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் தினவிழா கொண்டாடப்பட்டது. கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை தாங்கினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்** முன்னிலை வகித்தார். அறக்கட்டளை உறுப்பினர்கள் **எம்.என்.பழனி, எம்.முத்துகுமார்,** கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார். துணைமுதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத்தலைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

**இவ்வாசிரியர் தினவிழாவில் திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ச.அருள்செல்வம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, பங்கேற்ற அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பித்தார்.** ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலோடு, சமுதாயப் பணியும் ஆற்றவேண்டும். மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டு வரவேண்டும். அவர்களுக்கு உளவியல் சார்ந்த ஆலோசனைகளைக் கொடுத்து, ஒழுக்கம் நிறைந்தவர்களாக மாற்றப் பாடுபட வேண்டும். ஆரம்ப வகுப்பில் தொடங்கும் மாணவன் உயர்கல்வி, ஆராய்ச்சிக் கல்வி எனச் செல்லும் வரை அவர்களைக் கண்காணித்து வழிகாட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவிற்காகக் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. **"இன்றைய சூழலில் இணைய வழிக்கற்றல் சவால்களும் தீர்வுகளும்", "கரோனா பெருந்தொற்றினால் கல்விமுறையில் ஏற்பட்ட சவால்களும் எதிர்வினையும்"** என்னும் தலைப்புகளிலான கட்டுரைப் போட்டியில் திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களைச் சார்ந்த 273 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். **"இன்றைய சூழலில் இணைய வழிக்கற்றல் சவால்களும் தீர்வுகளும்,** என்னும் தலைப்பில் முதல் பரிசாக 1/2 பவுன் தங்கக் காசு பெரியகுளம், அரசு உயர்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியை **திருமதி எஸ்.செல்வபிரியா** அவர்களும், இரண்டாம் பரிசாக 1/4 பவுன் தங்கக் காசு பனமுகை, பஞ்சாயத்து யூனியன் பிரைமரி பள்ளி, இடைநிலை ஆசிரியர் திரு.**கே.ராஜேஷ்** அவர்களும், மூன்றாம் பரிசாக திருவண்ணாமலை எஸ்.முருகையன் நினைவு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியை திருமதி.**ஏ.ரோஷினி** அவர்களும் பெற்றனர்.

**"கரோனா பெருந்தொற்றினால் கல்விமுறையில் ஏற்பட்ட சவால்களும் எதிர்வினையும்"** என்னும் தலைப்பில் முதல் பரிசாக 1/2 பவுன் தங்கக் காசு தண்டராம்பட்டு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியர் திரு.**சி.செந்தில்நாதன்** அவர்களும், இரண்டாம் பரிசாக 1/4 பவுன் தங்கக் காசு லாடவரம், அரசு மேல்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியர் திரு.**இரா.சந்திரசேகரன்** அவர்களும், மூன்றாம் பரிசாக கே.வேளூர், அரசு மேல்நிலைப் பள்ளி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியை திருமதி.**ப.தமிழ்ச்செல்வி** அவர்களும் பெற்றனர். போட்டியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் வெள்ளிக் காசுகளும், சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன.

கட்டுரை போட்டியினை, கல்லூரியின் முதன்மை நூலகர் முனைவர் **கி.விஜயகுமார்,** தமிழ்ப்பேராசிரியர் **கு.இளங்கோவன்** ஆகியோர் ஒருங்கிணைத்தனர். ஏழாம் ஆண்டாக நடைபெற்ற இவ்விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள், பத்திரிக்கையாளர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், கட்டுரையாளர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி


சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
25